# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

**முறையீட்டு மனு எண். 128/ந/2019**

**நாள் : 19/02/2020**

**திரு S. முருகேசன்,**
**தாராபுரம்.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**தாராபுரம் நகராட்சி,** – **எதிர் மனுதாரர்**
**தாராபுரம்.**

திருப்பூர் மாவட்டம், தாரபுரம், எம்.எஸ்.பி. நகர், 10–கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு எஸ்.முருகேசன் அவர்களின் மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 128/2019 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீடு குறித்து நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் விசாரணையின் போது முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த வாக்குமூலங்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :–

## ஆணை

திருப்பூர் மாவட்டம், தாரபுரம், எம்.எஸ்.பி. நகர், 10–கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு எஸ்.முருகேசன் என்பவர் தாராபுரம் பேருந்து நிலையத்தில் செயல்பட்டுவரும் கடைகளின் குத்தகைதாரர்களிடம் குறைந்த வாடகையை வசூலித்து நகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படுத்திய தற்போதைய ஆணையர் மற்றும் 2014–ஆம் ஆண்டில் பணியாற்றிய ஆணையாளர் ஆகியோரிடமிருந்து வாடகை இழப்புத் தொகையினை வசூலிக்கவும், மேற்படி முறைகேடு சம்பந்தமாக விசாரணை மேற்கொள்ள உரிய விசாரணை அதிகார அமைப்பிற்கு பரிந்துரை செய்ய ஆணையிடக்கோரியும் முறையீடு செய்துள்ளார்.

2. மனுதாரரின் முறையீடு குறித்து நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. பொது ஏலம் விட்டு ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாகிய அனைத்து நகராட்சி கடைகளையும் பொது ஏலத்தில் விட 20.12.2013 நாளிட்ட தீர்மானம் எண்:1027–இல் மன்றம் அனுமதி வழங்கியதின் அடிப்படையில் 16.06.2014 அன்று பொது ஏலம் மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் உயர்ந்த பட்ச வாடகை கோரிய நபர்களுக்கு கடைகளை ஒப்படைப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்

பட்டதென்றும் ஆனால் கடைகளின் பழைய குத்தகைதாரர்கள் கடைகளை தங்களுக்கே ஒதுக்கீடு செய்யவேண்டுமென்று உச்சநீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து இடைக்காலத் தடை பெற்றுள்ளனர் என்று ஆணையர் தெரிவித்துள்ளார். கடைகளின் முன்னாள் குத்தகைதாரர்கள் உச்சநீதிமன்ற வழக்கைக் காரணம் காட்டி பழைய வாடகையை செலுத்தி வருவதால் தற்போதைய அங்காடி மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்து தரக்கோரி நகராட்சி நிர்வாக ஆணையருக்கு 27.07.2017 நாளிட்ட கடிதத்தில் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளதென்றும் ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும், ஏல நிபந்தனைகளின்படி பொறுப்புத் தொகை மற்றும் 12 மாத வாடகைத் தொகையை செலுத்தக்கோரி குத்தகைதாரர்களுக்கு 24.04.2018 மற்றும் 11.05.2018 நாளிட்ட அறிவிப்புகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் 18.07.2019 நாளன்று நடைபெற்ற கூட்டத்திலும் குத்தகைதாரர்களிடம் வலியுறுத்தப்பட்டது என்றும் ஆணையர் தெரிவித்துள்ளார். எனினும், வழக்கினை காரணம் காட்டி வைப்புத் தொகையினை செலுத்த காலம் தாழ்த்துவதால், நகராட்சியின் நிதி இழப்பினைக் கருத்தில் கொண்டு அங்காடி மதிப்பீட்டின் படி வாடகை நிர்ணயம் செய்து தர கண்காணிப்பு குழு அமைத்து தருமாறு 19.08.2019 நாளிட்ட கடிதத்தில் நகராட்சி நிர்வாக ஆணையரைக் கோரியுள்ளதாக தெரிவித்துள்ளார். 14.10.2019 அன்று நடைபெற்ற விசாரணையின் போது மேற்குறிப்பிட்ட விவரங்களை உறுதி செய்தார். மேலும், வாடகைத் தொகை மற்றும் உயர்த்தப்பட்ட வாடகைத் தொகை வசூல்செய்வது குறித்து அரசு வழக்குரைஞரின் தெளிவுரை பெற்று உரிய மேல்நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் 22.10.2019 நாளிட்ட கடிதத்தில்ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. முறையீட்டு மனுதாரரிடம் 14.10.2019 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. அன்றைய நாளில் தனது எழுத்துபூர்வமான வாதுரையையும் தாக்கல் செய்தார். அவ்வாதுரையில் 2014–ஆம் ஆண்டில் நடத்தபபட்ட பகிரங்க ஏலத்தில் நிர்ணயிக்கப்பட்ட உயர்த்தப்பட்ட வாடகையை ஏன் வசூலிக்கவில்லையென்றும், உரிய டெபாசிட் தொகையை வசூலிப்பதற்கு சட்டப்படியான நீதிமன்ற தடை ஏதும் இல்லாத நிலையில் அத்தொகை வசூலிக்கப்படவில்லை எனவும், காலி செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார். மேலும், நகராட்சி பணியாளர்களுக்கு சம்பளம் வழங்குவதில் உள்ள சிரமம் மற்றும் பொது சுகாதாரப் பணிகள் தடைபடுவது போன்ற இன்னல்களைக் களைய வருவாய் வசூல் உரிய முறையில் மேற்கொள்வதே அதற்குத் தீர்வாக அமையும் எனத் தெரிவித்துள்ளார்.

4. முறையீட்டு மனுதாரர் தனது 16.08.2019 நாளிட்ட மனு பத்தி 7–இல் உச்சநீதிமன்றம் பிறப்பித்தஇடைக்கால ஆணையில் வருவாய் வசூல் செய்ய தடை ஏதும் பிறப்பிக்கப் படவில்லை. மாறாக உயர்த்தப்பட்ட வாடகையை வசூல்செய்யவும், வழக்கு கடையை காலி செய்யாமல் இருக்கவும் இடைக்கால நிவாரண உத்தரவு மட்டுமே பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். எனவே, உயர்த்தப்பட்ட வாடகையை வசூலிக்க நகராட்சி நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்ற முறையீட்டு மனுதாரரின் குற்றச்சாட்டு ஏற்புடையதாக இல்லை. மேலும், குத்தகைதாரரிடமிருந்து மாதா மாதம் முறைகேடாக பணம் வசூலித்து தனிப்பட்ட முறையில் எதிர்மனுதாரர் ஆதாயம் அடைந்து வருகிறார் என்ற குற்றச்சாட்டிற்கும் முறையீட்டு மனுதாரர் எந்தவித ஆதார ஆவணங்களையும் சமர்ப்பிக்கவில்லை.

5. இந்நேர்வில், மேற்படி கடைகள் குறித்து உச்சநீதிமன்றத்தில் வழக்குகள் மற்றும் இடைக்காலத் தடையும் நிலுவையில் உள்ளன. இந்நிலையில், பழைய குத்தகைதாரர்கள் அரசு ஆணையின்படி 15% வாடகை உயர்வின்றி பழைய வாடகையினை இன்றைய நாள்வரை செலுத்தி வருவதைக் குறிப்பிட்டு 15% வாடகை உயர்வு அல்லது வழிகாட்டி மதிப்பின் பேரில் வாடகை நிர்ணயம் செய்யும் நிலையில் வழக்கை விலக்கிக் கொள்வதாக குத்தகைதாரர்கள் தெரிவித்துள்ளதைக் குறிப்பிட்டு, அங்காடி மதிப்பின் அடிப்படையில் வாடகை மறு நிர்ணயம்

செய்ய நகராட்சி நிர்வாக ஆணையரின் அனுமதி வேண்டி 27.07.2017 நாளிட்ட கடிதத்தால் நகராட்சி ஆணையர் கருத்துரு அனுப்பியுள்ளார். மேலும், அங்காடி மதிப்பீட்டின் படி வாடகை நிர்ணயம் செய்து தர கண்காணிப்பு குழு அமைத்து தருவதற்கான கருத்துருவும் நகராட்சி நிர்வாக ஆணையரின் பரிசீலனையில் உள்ளதாகவும் அறிய முடிகிறது, இந்நிலையில், வாடகைத் தொகை மற்றும் உயர்த்தப்பட்ட வாடகைத் தொகை வசூல் செய்வது குறித்தும் வழக்குரைஞரின் தெளிவுரை பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் ஆணையர் உறுதி அளித்துள்ளார். எனவே, மேற்படி நகராட்சி ஆணையாளரின் அறிக்கைகள் ஏற்கப்பட்டு, இம்மனுவின் மீதான விசாரணை நடவடிக்கைகளை இந்நிலையிலேயே முடித்துக் கொள்ள முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

**2020**–ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், **19**–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிடப்பட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

**செயலாளர்**

**பெறுநர்**

1. **திரு S. முருகேசன்,**
   **எண்.10, M.S.P. நகர்,**
   **தாராபுரம் –638 657.**
   **திருப்பூர் மாவட்டம்.**

2. **நகராட்சி ஆணையர்,**
   **தாராபுரம் நகராட்சி,**
   **தாராபுரம் – 638 657.**
   **திருப்பூர் மாவட்டம்**

**நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்**
**பிரிவு அலுவலர் (நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு – 3**
**இ.கோ. / உதிரி**